# உலகளவில் ஊழல் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 96-வது இடத்தில் உள்ளது

## வி.ஐ.டி.வேந்தர் ஜி.விசுவநாதன் தகவல்



**வேலூர் செப் 1-**

வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் 'தனிமா' ஓணம் பண்டிகை கொண்டாட்ட நிகழ்ச்சி நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது; வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் ஓணம் பண்டிகை 24 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டாடத் தொடங்கினோம். அப்போது விஐடியில் கேரளாவை சேர்ந்த 180 மாணவர்கள் படித்தனர். 10 ஆசிரியர்கள் பணி புரிந்தனர். இப்போது 4,160 மாணவர்கள் படிக்கின்றனர். 141 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். கல்வியின் மையமாக கேரளாவை கூறலாம். அந்த மாநிலம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக திகழ்கிறது. கேரளாவுக்கும் எனக்கும் 60 ஆண்டு தொடர்பு உள்ளது. மூத்த அரசியல்வாதி ஏ.கே. கோபாலன், இ.எம்.எஸ்.நம்பூதிரிபட் ஆகியோரோடு எனக்கு பழக்கம் உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் போராட்டத்தின் மூலம் ஆட்சிக்கு வருவார்கள். ஆனால் கேரளாவில் முதல் முறையாக தேர்தல் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தது. அந்தவகையில், இந்தியாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சி முதலில் ஆட்சி பிடித்த மாநிலம் என்றால் அது கேரளா தான். கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த இ.எம்.எஸ். நம்பூதிரிபட் தேர்தல் மூலமாக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கேரள மாநிலம் சிறந்த மாநிலம் ஆகும். அந்த மாநிலம் கல்வியிலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்குகிறது. உயர் கல்விக்கு மாநிலத்தை விட்டு வெளியே சென்று படிப்பவர்களின் எண்ணிக்கை கேரளாவில் குறைவு. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் 120 மில்லியன் டாலர் பணத்தை அனுப்புகின்றனர்.

வெளிநாடுகளுக்கு சென்று அங்கு பணிபுரிந்து இந்தியாவுக்கு பணம் அனுப்புபவர்களில் மகாராஷ்டிரா, கேரளா, தமிழகம் முன்னணியில் உள்ளது. உலகளவில் ஊழல் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 96-வது இடத்தில் உள்ளது. கேரளாவில் தான் ஓட்டு போடுவதற்கு யாரும் பணம் வாங்குவதில்லை. கேரளா குறைவான ஊழல் நடைபெறும் மாநிலமாக உள்ளது.அங்கு வெறும் 20 சதவீத அளவுக்கு ஊழல் நடைபெறுகிறது. தமிழகத்தில் 62 சதவீதமாக ஊழல் உள்ளது. மனித வள குறியீட்டில் இந்தியாவில் கேரளா முதல் மாநிலமாக உள்ளது. கேரளாவில் தொழில்துறையில் அதிக முதலீடு செய்யும்போது வேலைவாய்ப்பு பெருகும். இதன் மூலம் தொழில்துறையில் உற்பத்தி மேம்படும். இவ்விஷயத்தில் கேரளா அரசு கவனம் செலுத்த வேண்டும். துணைத்தலைவர் சேகர் விசுவநாதன் பேசும்போது, "கேரளாவில் வைக்கம் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு சமூக நீதிக்காகப் போராடி கவனத்தை ஈர்த்தார்.

கேரளாவைச் சேர்ந்த எம்ஜிஆரை தமிழகத்துக்கு கொடுத்தது கேரளா தான். அவர் முதல்வராக இருந்த போது தான் அரசு பள்ளிகளில் சத்துணவு திட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் மாணவர் கல்வி கற்கும் எண்ணிக்கை கூடியது. அவர் தான் விஐடி கல்வி நிறுவனம் தொடங்க அனுமதி கொடுத்தவர்" என்றார். சிறப்பு விருந்தினராக நடிகையையும், பின்னணி பாடகியுமான ரம்யா நம்பீசன், கவுரவ விருந்தினராக எழுத்தாளர் புஷ்பா குருப் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். தொடர்ந்து தனிமா கலை நிகழ்ச்சி மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அதைத்தொடர்ந்து ரம்யா நம்பீசன் மலையாளத்தில் பாடல்களை பாடி மாணவ, மாணவிகளை மகிழ்வித்தார்.விழாவில் துணைவேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணை வேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி ஆகியோர் பேசினர்.விழாவில் மாணவர் நல இயக்குனர் நைஜூ, ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பனைமடங்கி அரசு மேல்நிலைப்பள்ளியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்

## எம்.பி.கதிர் ஆனந்த், கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி தொடங்கி வைத்தனர்



**வேலூர். செப்.01-**

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்கு தரமான, உயர்மருத்துவ சிகிச்சைகளை அவர்களின் இடத்திலேயே வழங்கும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார். இந்த "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர் சிறப்பு மருத்துவ முகாம்களில் 17 சிறப்பு மருத்துவ நிபுணர்கள் குழு பயனாளிகளை பரிசோதித்து சிகிச்சை அளிக்கவும், தேவைப்படின் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் முதல் முகாம் 02.08.2025 அன்று காட்பாடி ஊராட்சி ஒன்றியம், வள்ளிமலை அரசினர் மேல்நிலைப்பள்ளியிலும், இரண்டாவது முகாம் 09.08.2025 அன்று வேலூர் ஊராட்சி ஒன்றியம், ஊசூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், மூன்றாவது முகாம் 23.08.2025 அன்று கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழ்அரசம்பட்டு அரசு மகளிர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்றது.

இந்த 3 முகாம்களிலும் 3947 பெரியவர்கள், 121 சிறியவர்கள், 91 மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இம்முகாமில் கலந்து கொண்ட 3497 நபர்களுக்கு ஆய்வக பரிசோதனைகளும், 3647 நபர்களுக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 1675 எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். அதனை தொடர்ந்து "நலம் காக்கும் ஸ்டாலின்" 4 வது முகாம் கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம், பனைமடங்கி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை கலெக்டர் வே. இரா. சுப்புலெட்சுமி, அவர்களும், வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் அவர்களும் தொடங்கி வைத்து பார்வையிட்டனர்.

கலெக்டர் அவர்களும், வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் முகாமில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு கண்ணொளி திட்டத்தின்கீழ் கண் கண்ணாடிகளையும், மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை, செயற்கை கால்கள் மற்றும் காதொலி கருவிகளை வழங்கினார்கள். இன்று நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் பெரியவர்கள்-1674, குழந்தைகள் –72 என மொத்த பயனாளிகள் – 1746 பயனடைந்தனர்.

இம்முகாமில் காது மூக்கு தொண்டை மருத்துவம் –765, கண் மருத்துவம் –920, பல் மருத்துவம் –1137, எலும்பியல் மருத்துவம் –112, நரம்பியல் மருத்துவம் – 34, மனநல மருத்துவம் – 46, தோல் மருத்துவம் –58, குழந்தைகள் மருத்துவம் –72, இருதய மருத்துவம் –69, நுரையீரல் மருத்துவம் –35, மகப்பேறு மருத்துவம் –52, சித்த மருத்துவம் –372, இயன்முறை (இயற்கை / பிசியோதெரபி) மருத்துவம் –88, பொது அறுவை சிகிச்சை மருத்துவம் –64, ஆய்வக பரிசோதனைகள் –1553, மருந்துகள் பெற்ற பயனாளிகள் – 1746, ECG-786, அல்ட்ராசவுண்ட் (USG)-107, ECHO-69 போன்ற சிகிச்சைகளை பெற்றுள்ளனர்.

இம்முகாமில் தொழிலாளர் நலத்துறை கட்டுமான மற்றும் இதர அமைப்பு சாரா பயனாளிகள் –511, மாற்றுத்திறனாளி நலத்துறையின் பயனாளிகள் –12, காப்பீட்டு அட்டைகள் (CMCHIS) வழங்கப்பட்டவை-33, தூய்மை பணியாளர்கள்-80 ஆகியோர் பயனடைந்துள்ளனர். இந்நிகழ்ச்சியில் கீ.வ. குப்பம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் லோ. ரவிச்சந்திரன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. பரணிதரன், இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு. பியூலா, துணைத் தலைவர் பாரதி வெங்கடேசன், மாவட்ட ஊராட்சிக்குழுத் உறுப்பினர் கவிதா சுதா சேகர், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் சீதாராமன், ஜெயா முருகேசன், ஊராட்சி மன்ற தலைவர் மகாலட்சுமி வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# அரக்கோணத்தில் விநாயகர் சதுர்த்தியையொட்டி சமபந்தி போஜனம்



**அரக்கோணம் செப்.01-**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரம் மதுரை பிள்ளை தெருவில் வர சக்தி விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது இதனை முன்னிட்டு ஐந்தாம் நாளில் சமபந்தி போஜனம் நடைபெற்றது இதற்கான ஏற்பாடுகளில் சி கஜேந்திரன் பி.செழியன் என்.வெங்கடேசன் முதலியார் ஈ..சண்முகம் வி.சரவணன் உள்ளிட்டோர் ஈடுபட்டனர்.மேலும் நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்கள் ஜிஎஸ் .மூர்த்தி எஸ்.டி. ராஜேஷ் பேன்சி தாமு என். பாலகிருஷ்ணன் எம்.குமார் விக்கி, ராமலிங்கம், தினேஷ் குமார், சீனிவாசன் உள்ளிட்டவர்களும் வார்டு பொதுமக்களும் கலந்து கொண்டனர்

நான் முதல்வன் திட்டம்

# உயர்வுக்குப் படி மற்றும் கல்விக்கடன் முகாம் செப்டம்பர் 1ம் தேதி விருத்தாசலத்தில் நடைபெறும்

## கலெக்டர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார் அறிவிப்பு

**கடலூர் செப் 01-**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் " நான் முதல்வன் – உயர்வுக்குப் படி" வழிகாட்டி நிகழ்ச்சி 01.09.2025 திங்கள்கிழமை அன்று முற்பகல் 09.00 மணி முதல் பிற்பகல் 12.30 வரை கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், விருத்தாசலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது. இம்முகாமில், உயர்கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான ஊக்குவித்தல், "உங்கள் வாழ்க்கைப் பாதையை எவ்வாறு தேர்வு செய்வது?", வங்கிக் கடன் மற்றும் அரசின் உதவித்தொகை பெறுவதற்கான வழிமுறைகள், அரசின் திட்டங்கள் மற்றும் உதவிகள் தொடர்பான விவரங்களை அறிந்திடும் பொருட்டு அரசின் பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டிகள் மாணவர்களுக்கு எளிதில் புரிந்திடும் பொருட்டு தங்கள் கருத்துகளை எடுத்துரைக்க உள்ளனர்.

மேலும், இவ்விழாவில் கல்விக்கடன் வழங்கும் முகாமும் நடைபெறும். ஒவ்வொரு கல்லூரிக்கும் அக்கல்லூரியின் முதல்வர் கல்விக்கடன் வழங்குதல் தொடர்பான கண்காணிப்பு அலுவலராக (Nodal Officer) செயல்படுவார். கல்விக் கடன் கோரும் மாணவ மாணவியர்கள் http://www.vidyalakshmi.co.in/students என்ற இணையவழி மூலமாக விண்ணப்பித்தும் உரிய ஆவணங்களுடன் மேற்படி முகாம்களில் சாதிச்சான்று, வருமானச்சான்று தேவைப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இணையவழியில் உடனடியாக சான்றுகள் வழங்கிட ஏதுவாக மேலாளர், மாவட்ட மின்ஆளுமை, மற்றும் வங்கிகளை ஒருங்கிணைத்து அரங்குகள் அமைத்திட மேலாளர், மாவட்ட முன்னோடி வங்கி ஆகியோர் மூலம் உதவி மையம் அமைக்கப்படும். மேலும், மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் விருத்தாசலம் வட்டம், விருத்தாசலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு கல்விக் கடன் பெற்றிட விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், தெரிவித்துள்ளார்.

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

# நந்தன் கால்வாய் திட்டத்துக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்தால் திட்டம் முழுமையடையும்

## தமிழக அரசுக்கு அன்புமணி ராமதாஸ் கோரிக்கை



**திருவண்ணாமலை செப்.01-**

திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டத்திற்கான விவசாயிகள் பயன்பெறும் வகையில் நந்தன் கால்வாய் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்தால் மட்டுமே திட்டம் முழுமையடையும் என தமிழக அரசுக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். திருவண்ணாமலை அருகே உள்ள கீரனூர் அணைக்கட்டு நந்தன் கால்வாய் திட்டத்தினை முன்னாள் நடுவன் அமைச்சரும் பாமக தலைவருமான அன்புமணி ராமதாஸ் நேற்று ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து விவசாய பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார். அப்போது நடைபெற்ற கூட்டத்தில் அன்புமணி ராமதாஸ் பேசுகையில் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தை சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆங்கிலேயர் காலத்தில் 90 ஆண்டுகளுக்கு முன்பு நந்தன் கால்வாய் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் இத்திட்டம் இன்னமும் முழுமையடையவில்லை. திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் வானம் பார்த்த பூமியாகும். விவசாயத்தையே நம்பியுள்ள மாவட்டங்களாகும். நந்தன் கால்வாய் திட்டம் கவுத்திமலை தொடங்கி ஓலையாறு துரிஞ்சலாறு வழியாக கீரனூர் அணைக்கட்டு வழியாக கால்வாய் வெட்டப்பட்டு விழுப்புரம் மாவட்டத்திற்கு கால்வாய் கொண்டு செல்லப்படுகிறது. இதன் மூலம் 6500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் தமிழகத்தில் 63 விழுக்காடு விவசாயிகள் வாழ்கின்றனர். இதில் மொத்தம் 8 கோடி மக்கள் வசிக்கின்றனர். நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் விழுப்புரம் பாண்டிச்சேரி மாநிலம் மற்றும் விழுப்புரம் திருவண்ணாமலை 2 மாவட்டங்களை சேர்ந்த 80 லட்சம் மக்கள் பயனடைவார்கள். எனவேதான் நந்தன் கால்வாய் திட்டத்திற்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்தால் மட்டுமே இத்திட்டம் முழுமையடையும். எனவே கால்வாய் அகலப்படுத்தி தூர்வாரி புனரமைக்க வேண்டும் என தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன். என்னிடம் அதிகாரம் இருந்தால் 3 மாதத்தில் நந்தன் கால்வாய் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவேன். வரும் சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்படவுள்ளநிலையில் ரூ.304 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அது வெறும் அறிவிப்போடு உள்ளது. எனவே நந்தன் கால்வாய் திட்டத்தை உடனடியாக தமிழக அரசு நிறைவேற்றிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார். பாக்ஸ் செய்தி கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி விவசாயிகள் முழக்கம் திருவண்ணாமலை அருகே கீரனூர் அணைக்கட்டு நந்தன் கால்வாய் திட்டத்தை ஆய்வு செய்த அன்புமணி ராமதாஸ் நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சார்பில் அதன் தலைவர் ச.அன்பழகன் தமிழ்நாடு விவசாயிகள் மற்றும் நீர்நிலைகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் மாநில பொதுச் செயலாளர் நா.அறவாழி ஆகியோர் தலைமையில் நடந்த கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டார். அப்போது விவசாய சங்க பிரதிநிதிகள் நந்தன் கால்வாய் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய் இணைக்க வேண்டும் இணைக்க வேண்டும் தென்பெண்ணை பாலாற்றை இணைக்க வேண்டும் கலக்காதே கலக்காதே திருவண்ணாமலை கழிவுநீரை ஓலையாற்றில் கலக்காதே என கோஷமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

ராணிப்பேட்டையில் உள்ள

# சிப்காட் தொழிற்பேட்டை, சிட்கோ தோல் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்: கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா நேரில் ஆய்வு



**ராணிப்பேட்டை.செப்.01-**

ராணிப்பேட்டை கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா இராணிப்பேட்டை மாவட்டம் சிப்காட் தொழிற்பேட்டை சிட்கோ தோல் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பகுதி 1 அமைந்துள்ள இடத்தின் அருகே காரை கிராமம் எல்லைக்குட்பட்ட 11.12 ஏக்கர் பரப்பளவில் உள்ள குளத்தினை பார்வையிட்டார்கள். குளத்தில் தோல் கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது என புகார் அவ்வப்போது வருகிறது.

அது குறித்து கேட்டறிந்தார்கள். தோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தொடங்கப்பட்ட பொழுது கழிவுநீர் வெப்பமாக்கும் முறைக்கு இக்குளம் பயன்படுத்தப்பட்டது. பின்னர் சுற்றுச்சூழல் பாதிப்பு என்பதால் இவை கைவிடப்பட்டுள்ளது. தோல் சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டுக்கு வந்த பின்பு கழிவு நீர் முறையாக சுத்திகரிக்கப்பட்டு பூஜ்ஜியம் மாசு தண்ணீர் மீண்டும் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏரி குளங்களில் வெளியேற்றப்படுவதில்லை என சுத்திகரிப்பு நிலைய இயக்குனர் தெரிவித்தார். தற்பொழுது இந்த புகாரை தவிர்க்கும் விதமாக சுத்திகரிப்பு நிலையம் சுற்றியும் தடுப்பு சுவர் ஏற்படுத்தி குளத்தை தூர்வாரி சீரமைத்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், சுத்திகரிப்பு நிலையம் முழு பாதுகாப்புடன் அரசின் விதிமுறைகளைக்குட்பட்டு செயல்படுகிறது என கலெக்டரிடம் தெரிவித்தார். குளத்தை சீரமைக்க திட்ட அலுவலர் சிப்காட் அவர்களை உடனடியாக பணியை தொடங்கி மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். தொடர்ந்து சிட்கோ சுத்திகரிப்பு நிலையம் பகுதி – 1 னை பார்வையிட்டு சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் ஒவ்வொன்றும் குறித்தும் கேட்டறிந்தார்கள். 82 நிறுவனங்கள் தோல் கழிவுநீரை சுத்திகரிக்க இந்த நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இன்றைய நிலையில் 70 நிறுவனங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன.

நிறுவனங்களின் கழிவுநீர்கள் இந்நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகிறது என தெரிவித்தனர். சுத்திகரிப்பு நிலையம் மீது எவ்வித புகார் வராத வண்ணம் செயல்பட வேண்டும். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையில் முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். தொடர்ந்து சிப்காட் பகுதியில் அமைந்துள்ள சிட்கோ பகுதி -3 ல் சுத்திகரிப்பு நிலையத்திலும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த நிலையத்தில் 20 தோல் தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுநீர் சுத்திகரிக்க ஏற்படுத்தப்பட்டது. இன்றைய நாளில் 17 நிறுவனங்கள் மட்டுமே இயங்கி வருகிறது. நிறுவனங்களின் கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இரண்டு வாரமாக சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நிறுவனங்கள் பராமரிப்பு பணியை மேற்கொள்வதால் செயல்படாமல் உள்ளது என தெரிவித்தனர். இந்த நிலையம் முறையாக செயல்படுவதை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர்கள் உறுதி செய்து அறிக்கை அளிக்க உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு குரோமிட்ஸ் கெமிக்கல்ஸ் நிறுவனம் கைவிடப்பட்டு அவ்விடத்தில் தற்பொழுது உள்ள குரோமியம் கழிவுகள் கொட்டப்பட்டுள்ள இடத்தினை பார்வையிட்டார்கள்.

குரோமியம் கழிவு ஆபத்துகளை தவிர்க்க இன்றைய நாளில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார். தற்காலிகமாக இந்த குரோமியம் கழிவுகள் மூலம் நீர் நிலம் மாசுபடுவதை தவிர்க்க உடனடி பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏதேனும் இருந்தால் மேற்கொள்ளலாம் என தெரிவித்தார்கள். அதேசமயம் அரசின் மூலம் இதற்கான தீர்வு பணிகள், நடவடிக்கைகளை கண்காணித்து தெரிவிக்கவும் கேட்டுக் கொண்டார். தற்காலிக நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய செயற்பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர் ஆகியோர் மூலம் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து மேல்விஷாரம் பகுதியில் உள்ள தோல் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டார்கள். விசாரம் டேனர்ஸ் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டு சுத்திகரிப்பு நிலையத்தில் 36 தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிக்க இந்நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது 15 நிறுவனங்கள் மட்டுமே இயங்கி வருகிறது. நிறுவனங்களின் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய இந்நிலையம் பயன்படுத்தப்படுகிறது.

தற்பொழுது இரண்டு வாரமாக பராமரிப்பு பணிகள் தொழிற்சாலைகள் செய்து வருவதால் நிலையம் முழுமையாக செயல்படவில்லை என தெரிவித்தனர். தோல் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எவ்வித காரணங்களுக்காகவும் சுத்திகரிக்காமல் கழிவுநீர் வெளியேற்றப்படக் கூடாது இதனால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகிறது. ஆகவே முறையாக சுத்திகரிப்பு நிலையம் செயல்பட வேண்டும். எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காத வகையில் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுகளில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய செயற்பொறியாளர் செல்வகுமார், சிப்காட் திட்ட அலுவலர் .கலைச்செல்வி, உதவி பொறியாளர்கள் ஆனந்தன், கௌதம், வட்டாட்சியர் ஆனந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், பாஷா, சுத்திகரிப்பு நிலைய இயக்குனர்கள்மனோகரன், புகழேந்தி, அசரப் அலி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



ஜெர்மனி சென்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது துணைவியார் துர்கா ஸ்டாலினை தமிழக தொழில்துறை அமைச்சர் டிஆர்.பி.ராஜா பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

# மேட்டூர் அணை நீர் வரத்து அதிகரிப்பு

மேட்டூர், செப். 01-

மேட்டூர் அணை நீர் வரத்து அதிகாரிக்கப்பட்டது.

காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக கர்நாடக அணைகளில் இருந்து உபரி நீர் காவிரியில் திறக்கப்பட்டுள்ளது.

கர்நாடக அணைகளின் உபரி நீர் வரத்து காரணமாக நேற்று காலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 9,828 கன அடியிலிருந்து வினாடிக்கு 16,493 கன அடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 15,000 கன அடி வீதமும் கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 850 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 118.65 அடியிலிருந்து 118.66 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 91.35 டிஎம்சியாக உள்ளது. பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவை விட அன்னிக்கு வரும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் சரிவில் இருந்து மீண்டு மெல்ல உயரத் தொடங்கியது

# மணிப்பூரில் பத்திரிகையாளர் மீது துப்பாக்கிச்சூடு

மணிப்பூர், செப். 01-

மணிப்பூரில் மலர் விழாவை செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர் துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்தில் மலர் விழாவை நாகாலாந்தை தளமாகக் கொண்ட தொலைக்காட்சி சேனலில் பணிபுரியும் பத்திரிகையாளர் சனிக்கிழமை செய்தி சேகரிக்க சென்றிருக்கிறார். அப்போது பத்திரிகையாளர் டிப் சைகியா மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில் அவரது வலது காலில் காயமடைந்தார். உடனே அவர் முதலுதவிக்காக சேனாபதி மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக நாகாலாந்துக்கு மாற்றப்பட்டார். தற்போது அவர் ஆபத்தில் இருந்து மீண்டுவிட்டதாக மருத்துவமனை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.


இதுகுறித்து மணிப்பூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். மூத்த போலீஸ் அதிகாரி கூறுகையில், தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஏர் ரைபிள் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டது. மர்ம நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவரை கைது செய்ய குழு விரைந்துள்ளது. இருப்பினும், தாக்குதலுக்குப் பின்னால் உள்ள நோக்கம் தெளிவாகத் தெரியவில்லை என்றார். இதனிடையே பத்திரிகையாளர் மீதான தாக்குதலுக்கு தெலைக்காட்சி சேனல் கண்டனம் தெரிவித்துள்ளது.

# ஒகேனக்கல் அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க தடை

தருமபுரி, செப். 01-

ஒகேனக்கல் அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.), கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாதுகாப்பு கருதி இந்த இரு அணைகளில் இருந்து தமிழக காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.



இந்த நிலையில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நேற்று முன்தினம் 14 ஆயிரம் கன அடியாக நீர்வரத்து இருந்தது. மேலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதனால் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 24 ஆயிரம் கனஅடியாக நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. நீர்வரத்து அதிகரிப்பால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்க மாவட்ட நிர்வாகம் தடைவித்துள்ளது.

விடுமுறை தினமான நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் காவிரி ஆற்றில் குவிந்தனர். அருவியில் குளிக்க தடைவிதிக்கப்பட்டதால் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். பின்னர் அவர்கள் ஆற்றின் கரையோரம் நின்று காவிரி ஆற்றில் பாயும் தண்ணீரை ரசித்து மகிழ்ந்தனர். மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டனர். சாலையோரம் இருந்த கடைகளில் பொறித்து வைத்த மீன்களையும் ஆர்வமுடன் வாங்கி சாப்பிட்டனர்.

ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் நடைபாதை, பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டமாகவே காணப்பட்டது.

இதனால் மசாஜ் தொழிலாளர்கள், மீன் சமையலர்கள், பரிசல் ஓட்டிகள் உள்ளிட்ட தொழிலாளர்கள், வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். இதனால் காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.



சென்னை மாநகராட்சி மணலி மண்டலத்திற்குட்பட்ட எவர்வின் வித்யாஸ்ரம் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவச்சான்றினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.



சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை சார்பில் வருகிற சட்டமன்ற தேர்தலை சிறப்பாக எதிர்கொள்வது குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு வருகை தந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு மாநில பாசறை இணைச்செயலாளர் ஜெ.இஷிகா நாச்சியார் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சி.சீனிவாசன், எஸ்.பி.வேலுமணி மற்றும் பாசறை மாநில செயலாளர் பரமசிவம் ஆகியோர் உள்ளனர்.



செப்டம்பர் 2-ம் தேதி முதல் மதுரை மாநகரில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி "மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற எழுச்சி பயணத்தை மேற்கொள்ள உள்ளார். இதற்காக மதுரை பரவையில் எழுச்சி பயணத்திற்கான பிரச்சார எல்இடி வாகனம் மற்றும் நிழற்குடைகளை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் மாநில மகளிரணி செயலாளர் பா.வளர்மதி மற்றும் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் உசிலை ஜெயபால், பரவை ராஜா, கு.திரவியம், சண்முகவள்ளி, வி.பி.ஆர்.செல்வகுமார், ஏ.பார்த்திபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# இந்த மாதம் 2-ம் வாரத்தில் மணிப்பூர் செல்கிறார் பிரதமர் மோடி?

புதுடெல்லி, செப். 01-

இந்த மாதம் (செப்டம்பர்) 2-ம் வாரத்தில் பிரதமர் மோடி இம்பால் மற்றும் சூரசந்த்பூர் மாவட்டங்களுக்கு செல்ல இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின அந்தஸ்து வழங்கும் விவகாரத்தில் மெய்தி மற்றும் குகி இன மக்களுக்கு இடையே கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் 3-ந் தேதி கலவரம் வெடித்தது. இதில் 250-க்கும் அதிகமானோர் பலியாகினர். கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகியும் இந்த இனக்கலவரம் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

இதற்கிடையில் மணிப்பூரில் பதற்றத்தை தணிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நீண்ட காலமாக ஊரடங்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இணைய சேவை தடை செய்யப்பட்டது.

இந்திய ராணுவத்தினர் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இத்தகைய முயற்சிகளால் படிப்படியாக மணிப்பூரில் அமைதி திரும்பினாலும், அவ்வப்போது சில மோதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. தற்போது அங்கு ஜனாதிபதி ஆட்சி நடைபெற்று வருகின்றது.

மலைவாழ் குக்கி இன மக்கள் தங்களுக்கு தனி நிர்வாகம் வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதே சமயம், இம்பால் பள்ளத்தாக்கில் பெரும்பான்மையாக உள்ள மெய்தி இன மக்கள், தேசிய குடிமக்கள் பதிவேட்டை செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், மணிப்பூரில் இனக்கலவரம் நடந்து 2 ஆண்டுகள் ஆன நிலையில், மிசோரம், அசாம் ஆகிய மாநிலங்களில், செப்டம்பர் 12 முதல் 14 ஆம் தேதிகளில் ரயில்வே மற்றும் பிற முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடங்கிவைக்க பிரதமர் மோடி செல்லவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மணிப்பூருக்கும் பிரதமர் மோடி செல்லலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், பிரதமரின் மணிப்பூர் பயணத்தின்போது, அங்கு பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தும், சில திட்டங்களையும் பிரதமர் மோடி தொடங்கி வைக்க வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

வரும் செப்டம்பர் 2ம் வாரத்தில் பிரதமர் மோடி இம்பால் மற்றும் சூரசந்த்பூர் மாவட்டங்களுக்கு செல்ல இருப்பதாக கூறப்படுகிறது. பிரதமரின் வருகைக்கான தேதிகள் முடிவு செய்யப்பட்டு வருவதாகவும் மணிப்பூர் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம் என்று மூத்த அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மணிப்பூரில் வன்முறை வெடித்ததில் இருந்து, ஒருமுறைகூட பிரதமர் மோடி அங்கு செல்லவில்லை என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தன. இந்த நிலையில்தான், பிரதமரின் மணிப்பூர் பயணம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

# டிராகனும், யானையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்

## பிரதமர் மோடியிடம் சீன அதிபர் வலியுறுத்தல்

பெய்ஜிங், செப். 01-

டிராகனும், யானையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் சீன அதிபர் வலியுறுத்தியுள்ளார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பது சீனா, ரஷ்யா, இந்திய உள்ளிட்ட 10 உறுப்பு நாடுகளை கொண்ட அரசியல், பொருளாதாரம் மற்றும் சர்வதேச பாதுகாப்பு அமைப்பாகும். இந்த அமைப்பு கடந்த 2001-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் கடந்த 2017-ம் ஆண்டு இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்தன. இந்த அமைப்பின் வருடாந்திர உச்சி மாநாடு ஆகஸ்டு 31 மற்றும் செப்டம்பர் 1-ம் தேதிகளில் நடைபெறும்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் மோடியும், சீன அதிபர் ஜின்பிங்கும் சந்தித்து பேசினர். இந்த சந்திப்பின்போது இரு தலைவர்களுக்கும் இடையே இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, எல்லை பிரச்சினை, அமெரிக்க வரிவிதிப்பு உள்ளிட்ட விவகாரங்கள் விவாதிக்கப்பட்டன. இந்த சந்திப்பின்போது பேசிய சீன அதிபர் ஜின்பிங், "சீனாவும், இந்தியாவும் பழம்பெரும் நாகரிகங்களைக் கொண்ட கிழக்கத்திய நாடுகள். நாம் சிறந்த அண்டை நாட்டு நட்புறவுகளைக் கொண்ட நண்பர்களாகவும், ஒருவருக்கொருவர் வெற்றியை பெற வைக்கும் கூட்டாளிகளாகவும் இருக்க வேண்டும். டிராகனும், யானையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார். இதையடுத்து பிரதமர் மோடி பேசுகையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெற்றிகரமான தலைவராக சீனா பொறுப்பேற்றதற்கு நான் உங்களை வாழ்த்துகிறேன். சீனாவுக்கு வருகை தர அழைப்பு விடுத்ததற்கும் இன்று (நேற்று) நடைபெற்ற சந்திப்புக்கும் நன்றி" என்று தெரிவித்தார்.

# புதிய டி.ஜி.பி.யாக ஜி.வெங்கட்ராமன் நியமனம்

சென்னை, செப். 01-

தமிழகத்தின் காவல் துறை தலைமை இயக்குநராக (பொறுப்பு ) ஜி. வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக டி.ஜி.பி.யாக இருந்த சங்கர் ஜிவால் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, பொறுப்பு டி.ஜி.பி.யாக வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த ஜி. வெங்கட்ராமன், 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பிரிவு ஐபிஎஸ் அதிகாரியாகத் தேர்வானவர்.

இளங்கலை பொருளாதாரம், முதுகலை பொது நிர்வாகம் முடித்த இவர், 1996 ஆம் ஆண்டு திருச்செந்தூரில் பணியைத் தொடங்கினார்.

1996 -ல் உதவி காவல் கண்காளிப்பாளராக (ஏஎஸ்பி) திருச்செந்தூரில் பணியாற்றினார். 1997-ல் கோவில்பட்டி, ராமநாதபுரம் உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றினார்.

1998 ஆம் ஆண்டு காவல் கண்காணிப்பாளரனதும் மத்திய அரசின் உளவுப் பிரிவு பணிக்குச் சென்று, தமிழகம் திரும்பினார். 2001 ஆம் ஆண்டு சென்னை காவல் கண்காணிப்பாளராக பணியாற்றினார். 2008 ஆம் ஆண்டு டிஐஜியாக பதவி உயர்வு பெற்றார்.

2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் துறையில் சிபிசிஐடி டிஐஜியாக இருந்தார். 2012-ல் ஐஜியாக பதவி உயர்வு பெற்றார். 2019ஆம் ஆண்டு ஏடி.ஜி.பி.யாக பதவி உயர்வு பெற்று, சைபர் கிரைம், தலைமையகம், நிர்வாகப் பணிகளில் பணியாற்றினார்.